**அக்டோபர் - 20**

**"சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும், புறாக்களைப்போல கபடற்றவர்களுமாய் இருங்கள்." - மத் 10 : 16.**

**ஆ!** கர்த்தரின் எல்லாப் பிரியமுள்ள ஜனங்களும் சத்தியத்திற்கு ஊழியம் செய்ய அவர்களுக்கு இருக்கும் முயற்சிகள் சம்பந்தமாக ஞானத்தின் மதிப்பைக் கற்றுக் கொள்ளக்கூடும்! நம்முடைய கர்த்தர் சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களாயும், புறாக்களைப்போல கபடற்றவர்களாயும் இருக்கும்படி போதித்தது மட்டுமல்லாமல், தன்னுடைய சொந்த பணிவிடை ஓட்டத்திலும், மற்றொரு சந்தர்ப்பத்தில் அப்போஸ்தலரிடம் "இன்னும் அநேகக் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்க மாட்டீர்கள்." என்று சொல்லி இந்தப் படிப்பினைக்குத் திருஷ்டாந்தம் காட்டினார். நாமும் உடனே சில சத்தியங்களைச் சொல்ல அநுகூலமான, அநுகூலமில்லாத சமயங்கள் இருக்கின்றன என்றும், அவைகளைக் கொடுப்பதில் விவேகமுள்ள முறைகளும் விவேகமில்லாத முறைகளும் இருக்கின்றன என்றும், கற்றுக் கொள்ள வேண்டும். நாம் பொய்களைப் பேசுகிறதில்லை என்பது மட்டும் போதாது. நாம் சத்தியத்தைப் பேசுகிறோம் என்பதும் போதாது. கூடுதலாக நாம் சத்தியத்தை அன்பிலே கூறுகிறோம் என்று நாம் கவனமாய்ப் பார்க்க வேண்டும். பயிற்றுவிக்கப்பட்ட அன்பு, அதிக நன்மையை செய்யத்தக்கதாக ஞானத்தை உபயோகிக்கிறது.

**-Z '04, 91 (R 3339)**

சர்ப்பத்தின் ஞானத்தையும், புறாவின் கபடற்ற தன்மையையும் உடையவர்களாயிருப்பது, சமயத்துக்கேற்ற சாதுரியத்தையும், கபடற்ற தன்மையையும் ஒன்று கலந்து உடையவர்களாயிருப்பதைக் குறிக்கிறது. பொதுவாகத் தவறாகப் புரிந்து கொள்ளுகிற ஜனங்களிடத்திலும், சிலவேளைகளில் குதர்க்கமாக அர்த்தம் செய்து அடிக்கடி துன்புறுத்துகிற ஜனங்களிடத்திலும் நன்மை பயக்கக்கூடிய செய்தியோடு வந்து அவர்களோடு கலக்கின்ற ராஜ்யத்தைப்பற்றிக் கூறுகிறவனுக்கு, இந்த ஒன்றுகலந்த தன்மை அவசியமாயிருக்கிறது. இந்தத் தன்மைகள் சமப்படுத்தப்பட்டு ஒன்று கலக்கப்பட வேண்டும். நம்முடைய சமயத்திக்கேற்ற சாதுரியம் கபடமற்றதாயிருக்க வேண்டும். நம்முடைய கபடமற்ற தன்மை சமயத்திக்கேற்ற சாதுரியமற்றதாயும் இருக்கக் கூடாது. உயர்ந்த பிரதான குணசீலங்கள் (விசுவாசம், நம்பிக்கை, இச்சையடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம், அன்பு) எல்லாவற்றிற்கும் மேலாக இந்த சந்தோஷமான சமப்படுத்துதலுக்கு உதவுகிறது. சபையைக் கூட்டிச் சேர்த்து ஸ்திரப்படுத்துகிறதும், உலகுக்குச் சாட்சி கூறி குறைந்த பட்ச எதிர்ப்போடு சாத்தானுடைய ராஜ்யத்தை நிர்மூலமாக்குவதில் ஒத்துழைப்பதும் இதன் விளைவாயிருக்கிறது.

**- P '32, 150.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**லூக் 10:3; ரோம 16:19; எபே 5:15; 1கொரி 14:20; பிலி 2:15; 1கொரி 9:19-23; 2கொரி 12:6; நியா 8:1-3; 1ராஜா 3:24-28; அப் 23:6-10.**

**கோபுர வாசிப்பு : Z '12, 393 (R 5151).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் சாமர்த்தியத்தையும், கபடமின்மையையும் ஒன்றுசேரக் கலந்தேனா? எவ்வாறு? ஏன்? பலன் என்ன?**